


# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லாஇலாஹ இல்லல்லாஹு
முஹம்மதுறஸூலுல்லாஹு"

புத். 1. { அறபு ஹி 1312 ஜமாதுல்அவ்வல்மீ 1உ செ.கி. / இங்கிலிஷு ஹி 1894 ஒக்டோபர்மீ 30உ செ.கி } இல. 18.


## ஸ்திரீ புருஷர்களின் சுபாப பேதம்.

மனுஷ சுபாபத்தைக் குறித்து ஆராய்ந்து ஆராய்ச்சி செய்கிற தத்துவ சாஸ்திர வித்துவ ஞானிகள் ஸ்திரீ புருஷர்களின் சுபாபம் பல விஷயங்களில் பேதப்படுகிறதென்று கண்டிருக்கிறார்கள். ஸ்திரீகள் புருஷரை விட உல்லாசமும் சந்தோஷமும் மன இளக்கமும் உடையவர்கள் புருஷர் ஸ்திரீகளை விட மனக்கட்டிமையும், தீர்ந்த எண்ணமும், அடக்கமுமுடையவர்கள். இதற்கு சாஸ்திரிகள் பல விதமான காரணஞ்சொல்லுகிறார்கள். பெண்களின் இரத்தமும் நரம்பும் மிகவும் இலேசும் நுண்மையுமாயிருப்பது அவர்களுடைய இளநெஞ்சக்குக் காரணமென்றும், ஆண்களின் இரத்த நரம்புகள் அதிக பெலனும் கட்டிமையுமாயிருப்பது அவர்கள் மன வலிமைக்குக் காரணமென்றுஞ் சொல்லுகிறார்கள்.

ஆண்கள் பெண்கள் என்கிற ஜாதி பேதத்தை அல்லாஹுதஆலா சரீர தத்துவத்தில் மட்டுமல்ல, ஆன்ம

தத்துவத்திலும் அமைத்திருக்கிறான் என்பது வேறு சில சாஸ்திரிகளின் அபிப்பிராயம். காரணம் எப்படியு மிருக்கட்டும்; காரியம் வாஸ்தபந்தான். ஸ்திரீ புருஷர்கள் பல விஷயங்களில் குண வேற்றுமை யுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆதலால் புருஷர் ஸ்திரீகள், இயல்பானது தத்தம் மனசில் ஸ்தாபித்திருக்கிற போங்கை எல்கை தப்பிவிடாதபடி, காத்து நடக்கவேண்டியது அத்தியாவசியம். ஸ்திரீகள் தங்கள் மனச் சார்பின்படி அதிக குசாலும் அனுவசரமான கொண்டாட்டமு முடையவர்களா யிருப்பார்களானால், சீக்கிரம் திண்டாட்டமடைவார்கள். புருஷரும் தங்கள் மனச் சார்பின்படி மிதமிஞ்சின மென்னமும் மனக் கடினமும் காண்பிப்பார்களானால், உலகத்தின் நியாயமான சந்தோஷத்தை இழப்பதுமன்றி, மனுஷ சுபாபமற்றவர்கள் என்ற பேரும் பெறுவார்கள். புருஷர் கருங்கற் போலவும் இருக்கக் கூடாது; ஸ்திரீகள் வெறுந் தண்ணீர் போலவும் இருக்கக்கூடாது. இப்படி இருந்தால் புருஷன் வர வர சுகேப் பான மூர்க்க சுபாபியாவான்; ஸ்திரீ சரசம் மிஞ்சின நடனக்காரியாவாள்.

அல்லாஃ சகலத்தையும் நன்னோக்கத்தோடு உண்டுபண்ணியிருக்கிறபடி இவ்வொழுக்கம் இதமாய் நடந்தேறுவதற்கு ஸ்திரீ புருஷர்களை ஒன்றோடொன்று நன்றாய் இசைகிற சுபாப பேதத்தோடு சிருஷ்டித்திருக்கிறான். புருஷன் வேலை செய்த இளைப்பினாலும், குடும்ப பாதுகாப்பின் கவலையினாலும், மற்றும் தொல்லைகளினாலும் நிறைந்திருக்கும்போது, ஸ்திரீயானவள் செந்தாமரைபோல் மலர்ந்திருக்கிற தன் முகத்தைக் காண்பித்துக் கிளிபோல் வாயைத் திறந்து மகிழ்ச்சியும் உல்லாசமும் மதுரமுமான தேன் மொழிகளைப் பேசி, பிரகாசமான முத்துப்போன்ற தன் பல் வரிசைகள் துலங்கச் சிரிக்கும்போது, புருஷனுடைய மனக் கவலைகளெல்லாம் காலைச் சூரியனைக் கண்ட இருள்போல் பறந்துபோகிறது; அவனுடைய மனசிலே இருந்த பாரம் இறங்குகிறது; அவன் ஆறுதலையும் ஆனந்தத்தையும் அடைகிறான். இவ்வாறு புருஷனுக்கு இயல்பாய் உண்டாகிற வருத்தமானது ஸ்திரீயினுடைய இயல்பான சந்தோஷ சுபாபத்தினால் நீங்கிப்போக, இவ்வொழுக்கம் மாட்சிமையடைகிறது, அஃறிணை ஜெந்துக்களுக்குள்ளே ஆண் சாதிதான் பெரும்பாலும் அழகும் குரலினிமையும் உடையது; ஆனால் உயர்திணைச் சிருஷ்டிகளாகிய நமக்குள்ளே பெண்பாலர் அதிக ரூப லாவண்ணியத்தையும் குரலினிமையையும் பெற்றிருக்கிறார்கள். வீட்டுக்கு வெளியே போய் பாடுபட்டு அலுத்து வருகிறவன் வீட்டுக்குள்ளே பிரவேசித்தவுடன் ஆறுதலையும் சந்தோஷத்தையும் அடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடே தான் சர்வ ஞானமுள்ள அல்லாஹுத் தஆலா ஸ்திரீகளை அப்படிப் படைத்திருக்கிறான்.

## பூகம்பம்.

போர்த்துக்கீஸ் தேசத்தின் பிரதான பட்டணமாகிய லிஸ்பன் பட்டணத்தி லுண்டுபட்ட பூகம்பத்தில், அப்போது அங்கே அவ்வேளையிலிருந்து அவ்வாபத்தால் தப்பிப்பிழைத்த ஒருவர் எழுதியதை "அடுத்த பத்திரிகையிற் தெரிவிப்போம்" என்று சென்ற 17 மிலக்கப் பத்திரிகையிற் சொன்னோம். இப்போது அது சங்கதியை யெழுதுகிறோம். அதாவது:-

1755-ஞ நவெம்பர் மாசம் 1ந் தேதி காலையானது வெகு ரம்மியமாயிருந்தது. ஆகாசத்தில் எவ்வளவும் அக்கு அழுக்கு இல்லாமல் சூரியன் பூரணமான ஒளியோடு விளங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சில நிமிஷங்களுக்குள்ளெல்லாம் லிஸ்பன் பட்டணத்தை அழித்துப் பாழாக்கிப் பார்ப்பவருக்கு ஓர் அச்சந்தோற்றும்படியாய்ச் செய்வதான துன்பம் உண்டாகப்போவதாயிருக்க, அப்போது அதற்கு யாதொரு அறி குறியும் காணப்படவில்லை. அன்றைத்தினம் காலையில் ஒன்பது மணி அடித்துப் பத்து மணி அடிப்பதற்குமுன் நான் என் வீட்டில் என்னுடைய அறையில் உட்கார்ந்து ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். அதை எழுதி முடித்தவுடனே நான் எழுதிக்கொண்டிருந்த மேசை மெதுவாய் நடுங்கத் தொடங்கிற்று அப்போது காற்றே யில்லாமல் இருந்தபடியினால், மேசை அசைவதற்குக் காரணம் தெரியாமல் நான் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருக்கையில், நான் தங்கியிருந்த வீடுமுழுதும் அஸ்திவாரத்தோடு அசையத் தொடங்கிற்று இது தெருவில் ஓடுகிற வண்டிகளின் ஓசையினால் இருக்கலாமென்று முதலில் நினைத்தேன் பின்பு நிதானித்துப் பார்த்ததில் அவ்வோசை பூமிக்குள்ளேயிருந்து வருகிறதென்று, அதனாலேதான் வீடு நடுங்குகிறதென்றும் தெரியவந்தது. ஓசையானது வெகு தூரத்திலிருந்து கேட்கப்படுகிற இடியின் ஓசைபோல இருந்தது. இவ்வளவெல்லாம் ஒரு நிமிஷத்திற்குள் நடந்தது. அதனால் அது பூகம்பத்தின்முன் னுண்டாவதாயிருக்கலாம் என்று பயந்து எழுந்திருந்து கையிலிருந்த இறகைக் கீழே எறிந்துவிட்டு அங்கேயே இருக்கலாமென்றும், அல்லது வெளியில் தெருவுக்கு ஓடிப்போனால் நல்லதென்றும் நிச்சயந் தோன்றாமல் மெய் மறந்து நின்று விட்டேன். இதற்குள்ளாக அந்தப் பட்டணத்திலிருந்த கட்டடங்களெல்லாம் இடிந்துவிழுந்தாற்போல் வெருவத்தக்க ஓர் ஓசை உண்டாய்க் காதுகளைக் கும்மென்றடைத்துவிட்டது நான் இருந்த வீடும் விசேஷமாய்க் குலுக்கப்பட்டு அவ்வீட்டில் முதல் மெத்தையாகிய நான் இருந்த இடத்துக்கு மேலேயிருக்கிற மெத்தைகளெல்லாம் உடனே இடிந்து விழுந்துபோயின. நான் இருந்த மெத்தை இடிந்து விழாமற் போனாலும் அதிலிருந்தசாமான்களெல்லாம் முன்னிருந்த விடத்திலிராமல் இறைந்து போயின நான் நின்றவிடத்திலே

யே காலை நிறுத்திக்கொள்வது கடினமாய்ப் போய்விட்டது. சுவர்களெல்லாம் முன்னும் பின்னுமாய் ஊசலாடுவதைப் பார்க்கும்பொழுது வெகு பயங்கரமாயிருந்தது. சுவர்கள் அங்கங்கே பிளவுபட்டு அந்தப் பிளப்புகளிலிருந்து பெருங்கற்கள் நான்குபக்கங்களிலும் ஒன்றாய்ச் சொரிந்துகொண்டிருந்தன. அவைகளில் நுழைந்திருக்கிற கைகளெல்லாம் பிடுங்கிக்கொண்டன. இவைகளையெல்லாம் பார்த்து, நான் தப்பிப் பிழைக்கப் போகிறதில்லையென்றும், அங்கேயே நசுங்கி இறக்க வேண்டியதென்றும் எனக்குத் தோன்றிவிட்டது.

இப்படியிருக்குஞ் சமயத்தில் திடீரென்று ஆகாயமுழுதும் இருள்பரவி மூடிக் கொண்டது. எதிரிலிருக்கிற வஸ்து ஒன்றும் கண்ணுக்குத் தெரியவில்லை. அநேக வீடுகள் இடிந்து விழுந்து போனபடியால் அதினின்றும் மண்ணும் சுண்ணாம்புமாய்க் கலந்து தூளெழும்பிச் சூழ்ந்துகொண்டு எனக்குப் பத்து நிமிஷ காலம் வரையில் மூச்சுவிடுவதுங் கூடாமற் போய்விட்டது. இந்த இருள் நீங்கிப் பூகம்பமும் சிறிது சாந்தமானவுடன் நான் இருந்த அறையைச் சுற்றிப்பார்க்கும்போது அதில் ஒரு பெண்பிள்ளை கையில் ஒரு இளங்குழந்தையை வைத்துக்கொண்டு உடம்பு முழுதும் தூசு படிந்து பயத்தினால் முகம் வண்ணங்குறைந்து தேகம் நடுநடுங்கத் தரையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளை நீ எவ்விதமாய் இவ்விடத்தில் வந்தாயென்று நான் கேட்டதற்கு, பயத்தின் மிகுதியினால் யாதொரு மறுமொழியும் சொல்ல அவளுக்குக்கூடாமற்போய்விட்டது. உலகம் முடியுங் காலம் வந்துவிட்டதென்று நீ நினைக்கவில்லையா என்று அவள் என்னை மிகுந்த பரிதாபத்தோடு கேட்டதுமன்றி, தான் தாகத்தினால் வருந்துகிறபடியால் அதைத் தீர்த்துக்கொள்ளத் தனக்குத் தண்ணீர் சம்பாதித்துக்கொடுக்க வேண்டுமென்றுங் கேட்டாள். அதற்கு நான்: இப்போது வீடு இடிந்து நம்முடைய தலைகளின்மேல் விழுந்துகொண்டிருக்கிறபடியால் மறுபடியும் பூமி நடுங்கத்தொடங்கினால் நாம் உயிரோடு புதைந்துபோகும்படியான தசையாயிருக்க இப்போது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வழிதேடுவதை விட்டுத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளத் தண்ணீர் தேடச் சமயமோ என்று சொல்லி, அவளை என் கையால் பிடித்து அழைத்துக்கொண்டு விரைவோடு மெத்தையினின்றும் கீழே இறங்கிவந்து அத்தெருவினருகில் டேகஸ் என்கிற நதிக்கரையானபடியால் அவ்விடத்திற்குப் போவதற்காகத் தெருவழியாய் ஓடினோம். அங்கே வழிக்குக் குறுக்காக வீடுகள் இடிந்து விழுந்திருந்தபடியால் போவதற்குக் கூடாமையாய்ப்போய் அதை விட்டுத் திரும்பிவிட்டோம். திரும்பிப்போகும்போது இடிந்து விழுந்திருக்கிற கட்டிடங்களின்மேல் அந்தப் பெண்பிள்ளையை அழைத்துக்கொண்டுபோனதில் என் உயிருக்கு அபாயம் நேரிடும்போலிருந்தது. போகிற வழியில் ஓர் இடத்தில் நான் கைகளால்

தொத்தி ஏறவேண்டியிருந்தபடியால் அந்தப் பெண்பிள்ளையை என் கையைவிட்டுச் சிறிது பின்னே நிற்கச் சொன்னேன்; அவள் அப்படியே கையை விட்டவுடன் தலையில் ஒரு பெருங்கல் விழுந்து அவளும் குழந்தையும் நசுங்கி இறந்தார்கள். அப்போது நான் இருந்த இடத்திற்கும் எனக்குப்பின் அவள் இருந்த இடத்திற்கும் இரண்டு மூன்று அடி தூரந்தான் இருக்கும். இவ்விடத்தை விட்டுப் போகும்போது ஒரு நெருங்கிய வீதிவழியாய்ப் போகவேண்டியிருந்தது. அதில் இருபுறமும் கட்டியிருந்த வீடுகள் நாலைந்து மெத்தைகளுள்ளனவாயும் பழையனவாயும் இருந்ததனால், அநேகம் அடியோடு இடிந்துபோனவைகளும் அநேகம் இடிந்துகொண்டிருப்பவைகளுமாய் இருந்தன. ஆகையால் அந்தத் தெருவில் நடப்பவரெல்லோரும் ஒவ்வோர் அடி வைக்குந்தோறும் மற்றோர் அடி வைப்பதற்குமுன் மரணமடைந்துபோவோமோ என்று பயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அநேகர் இறந்துபோகாமற்போனாலும் அவர்களுக்குப் பட்டிருந்த காயங்களால் அப்புறம் அசைய வல்லமையற்று அதனால் தங்களுக்கு மரணம் நேரிடாமல் தப்பித்துக்கொள்ள வல்லமை இல்லாதவர்களாய் இருந்தவிடத்திலேயே இருந்துகொண்டிருந்தார்கள். ஆனாலும் "தன் உயிரே தன் செல்வம்" என்றபடி, தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வது ஸ்வபாவத்தில் முதல்விதியாயிருக்கிறபடியால் இவைகளையெல்லாம் பாராட்டாமல் நான் கூடிய துரிதத்தோடுபோய் அந்த நெருக்கத் தெருவைக் கடந்து ஸெயிண்ட் பால்ஸ் சர்ச்சு என்கிற கோயிலுக்கு எதிரிலிருக்கிற மைதானத்தில் யாதோர் ஆபத்துமில்லாமல் போய்ச்சேர்ந்தேன். நான் அங்கே போய்ச் சேர்வதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்னேதான் அந்தக் கோயில் இடிந்து விழுந்து அதற்குள் பஜனை நிமித்தம் வந்திருந்த ஜனங்களுள் அநேகர் கீழே அகப்பட்டுக்கொண்டு இறந்துபோய் விட்டார்கள். அந்த இடத்தில் சற்றுநேரம் நின்று யோசனை செய்ததில், இங்கே இருந்தால் ஆபத்துக்கிடமாம் என்று தோன்றினபடியால் இரண்டாவது தடவை கம்பமுண்டாகிற சமயத்திற்கு அப்போது ஆடிக்கொண்டிருந்த வீடுகள் விழுமாகையால் அவைகளுக்குச் சமீபத்திலிராமலிருப்பதற்காக மேலே சொல்லப்பட்ட கோயிலின் மேலண்டைக் கொடியின் இடி சுவர்களின் மேல் ஏறி வெகு வருத்தப்பட்டு டேகஸ் நதியோரத்துக்குவந்தேன். அந்த ஆற்றோரத்தில் வேற்றுமையின்றி உயர்ந்தவர்களும் தாழ்ந்தவர்களும் ஆண்களும் பெண்களும் ஒன்றாய்ப் பெருங் கூட்டங்கூடி முழந்தாள் இட்டுக்கொண்டும் மாரடித்துக் கொண்டும் கடவுளை நோக்கித் துதி செய்வதும் "கருணைவைத்துக் காப்பாற்ற வேண்டும்" என்று முறையிடுவதுமாய் இருந்தார்கள். இப்படித் துதிசெய்துகொண்டிருக்கும் சமயத்தில் பூமி இரண்டாந்தடவை நடுங்கத் தொடங்கிற்று

இன்னும் வரும்.

## இல்லறம்.

இல்லறம் யென்பது, தொல்லுலகனைத்தும் சொல்லளவென மயக்கங்கொண்டு சொற்பனத்திலே சொர்ண காகங் கண்டதுபோல், மனோ சிருட்டியாய் அந்தர மந்திரங்கள் கட்டாது இப்பிரபஞ்சமே சமஸ்த வஸ்துகளுக்கும் உறைவிடமெனக் கண்டு தெளிந்து ஆங்குள்ள உத்தம வஸ்துக்களை உண்டுருத்து சுகமுடையராய் மக்கள் இனிது வசித்தலேயாம்.

பெண்சாதி பிள்ளைகளோடிருந்து நல் வணக்கஞ்செய்வது தான் மேலாகியதென நபிகள் நாயகங் கூறியிருக்கின்றமையால் தலையில் முடிவைத்து, இராச்சாப்பாட்டைக் குறைத்து, காலகிரமமான ஸ்நானத்தை வெறுத்து வெளிக்கோலமாக யெல்லாம் வெறுத்ததாக சன்னியாசம் பூண்டு ஜடை வைத்து அன்னியாயமாய்க் கெட்டுப் போகாமலும், எனக்குகந்தவளாய் எல்லா இலட்சணமு முடையவளாய் சீதனமும் ஆயிரம் இரண்டாயிரம் குறையாமல் உடையவளாய் உள்ள பெண் வாய்க்கும் வரையும் நான் விவாகஞ் செய்யேனென்று வீணே இன்பமனுபவிக்க வேண்டிய காலத்தை இழந்து விடாமலும், உலகின கண்ணே ஒழுங்கை காட்டி.. சுகாதார விருத்தியின் கணமே மனதைக்கூட்டி அறியாமையளவாய்த் தோன்றிய வீண் மனோரதங்களை யோட்டி, மனோகரமாகிப் பொலியும் இவ்வுலகமாகிய சிங்கார வனத்தின் கண்ணே, வண்டுகள் முட்களை விலக்கி புஷ்பத்தினின்று தேனையுண்பதுபோல, தீமையாகிய முட்களைக் களைந்து, நன்மையாகிய இன்ப ரசத்தை யுண்டு களித்து, இகபோக சாதனையைக்கொண்டு, மிக்க ஆரோக்கியத்தை அடையவேண்டியதே மக்கள் கடனும். கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லை. என்பதுபோலும் வலியக்கிடைத்த பொருளை வாரியெறிந்தாற்போலும், இல் வாழ்கை நீத்தோன் நிலைமை பரிதாபத்தை விளக்கின்றதல்லாமல் நீத்தோனின் நீடிய மூடத்துவத்தையும் நன்கு விளக்குகின்றது. ஆகவே நல்லறமாகிய இல்லறத்தை மக்கள் யாவரும் விருத்திசெய்தல் வேண்டும். இதுவே புத்தியின் திறம்; புத்தியில்லாதவர்க்குப் புத்தி கூறி அவரைத்திருத்த யாராலியலும்.

## மாறுத காரணம் மகத்துவ குர் ஆன்.

இஸ்லாம் மார்க் கானுசாரிகளாகிய நாம் அனுஷ்டித்துவரும்வேதமாகிய "குர் ஆன் சரீபு" சர்வ தத்துவம் மகிமை பொருந்திய ஒப்பற்ற நாயன், தீர்க்கதரிசி மார்களுக்கெல்லாம் நாயகராகிய நபிகள் பெருமானார் அவர்களுக்கு அருளிய சுத்த சத்திய அருள் வாக்கியமாம். இந்த அருள்வாக்கியமாகிய குர் ஆன் சரீபு முப்பது அத்தியாயங்களையும் நூற்றிருபத்தினாலு அ

திகாரங்களையும், ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு அருள்வாக்கியங்களையும், எழு லட்சத்து முப்பத்து மூவாயிரத்து அறுநூற்றெழுபத்தொரு அட்சரங்களையுஞ் சேர்ந்தது. நபிகள் நாயகம் அவர்கள் காலந்துவங்கி, அந்நாயகம் இப்பிரபஞ்சத்தால் மறைந்து நாளிதுவரையிலும் இந்த குர் ஆன் சரீபில், ஓர் அட்சரம், ஓர்புள், ஓர் ஒத்து. ஓர் வாக்கியம், இவைகளிலொன்றாகிலும் குறையில்லாமலும் வித்தியாசமில்லாமலும், எத்தனை கோடி நமது முஸ்லிம்கள் எத்தெந்த திசைகளிலும், எவ்வளவு பாரபண்டித வித்வான்களாயிருப்பினும், இதில் ஒன்றைக் கூட்டவுங் குறைக்கவுஞ் செய்யாது உள்ளாவுள்ளபடியே வித்தியாசமின்றி வழங்கிவரப் படுகின்றது. நாயனுடைய அருள்வாக்கை வித்தியாசப்படுத்தத் திராணிபெற்ற மனிதன் யாவனுளன்! ஒருவனுமில்லை. இன்னும் நம் முஸ்லிம்களில் அனேகர் ஒரு அட்சரமாகிலும் குறைவின்றியே மனப்பாடமிட்டவர்களா யிருக்கின்றார்கள். அனேக வணக்கங்களிலும் எவ்வேளையு முபயோகப்படுத்தி வருகிறார்கள்.

எங்கள் அகில ரட்சக நாயகராகிய முஹம்மது நபி அவர்கள் உதித்தபோது ஆயிரக் கணக்கான அற்புதங்கள் வெளியாயின. மேலும் சகல நபிமார்களுக்குங் கொடுக்கப்பட்ட அற்புதங்களெல்லாம் நம்முடைய நாயகத்துக்கு கொடுக்கப்பட்டனவன்றியும், சந்திரன் வந்தடி பணிந்தது, ஈற்றங்குற்றி அழுதது, கற்கரடு, புற்பூண்டு, புலி, ஓநாய், ஒட்டை முதலிய மிருக சாதிகள் இவர்களுக்கு சலாம் சொல்லி விண்ணப்பஞ் செய்ததும், தங்கள் விரல்களுக்கிடையில் புனல் விளைத்ததும், இறந்தவரை யுயிர்ப்பித்ததும் இவை போன்ற எத்தனையோ காரண அதிசயங்கள் அவர்களுக்குண்டாயிருந்தன. இன்னும் அவர்களுக்கு மூவாயிரத்து சொச்சங் காரணங்கள் மட்டில் தனதாகக் கொடுக்கப்பட்டிருந்தன. இவைகள் யாவுக்கும் மேலான அற்புதம் இந்த சங்கையான குர் ஆன் ஒன்றுமா யிருக்கின்றது. ஏனெனில்; சகல அற்புதங்களும் அந்தந்தக் காலங்களிலே மாத்திரம் பகிரங்கமாகி அவ்வளவிலே முடிவாகினது. குர்ஆன் சரீபின் காரணமோ உலக முடிவு பரியந்த முடிவற்றதா யிருக்கின்றது.

ஆகவே, இப்படிப்பட்ட அற்புதமான குர் ஆன் சரீபிலுள்ள ஒரு அட்சரத்தையாவது ஒருவராலும் மாற்றக் கூடவே கூடாது முடிவுகால பரியந்தம் அது மாற்றவும்பட மாட்டாது. இவ்வுலகம் அழியக்கால முடுகியபோது அமரருக்கதிபர் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் எழுதப்பட்ட புத்தகங்களிருக்க அட்சரங்களை மாத்திரம் வானலோகத்துக் கெடுத்துச் செல்வார்கள், அதனால் அந்தியகாலத் தடையாளம் அறியக்கூடும். வேறு யாதொரு மாறுதல்களும் குர் ஆனுக்குக் கிடையாது

குர்ஆன் மொழி பெயர்த்தல் பூரண அறிவுடையவர்களாகிய கற்றோர்க்குத்தானு மெளிதானதல்ல தேவ திரு

யையால் ஒருவாறு சில பண்டிதர்கள் பிற பாஷைகளில் மொழி பெயர்ப்புச் செய்திருக்கின்றார்கள். மூல பாஷையாகிய அறபைக் கபடறக்கற்றுத் தேர்ந்து வாசித்தாலன்றி மற்றப்படி, குர்ஆனின் புதை பொருள் மூலாம்சங்களைக் கண்டறிதல் கூடாவாம்.

## ஒவ்வொருவரின் கடமை.

கல்வி செல்வம், மகிமை, விவேகம் முதலியவற்றால் சிறப்புடைய எவனொருவனாயினும், தனக்குக் கிடைத்திருக்கும் நற்பெறு பேறுகளுக்குத் தக்கபடி தனது சீவிய காலத்தில் நடத்துபவைகளுக்கு விசேஷ நெறிமுறைப்பிரமாணம் இருத்தல்வேண்டும்.

கல்விமான் தனது கல்வியைப் பிறருக்கு வஞ்சகமின்றிப் போதித்து விடுதலினால் கனமடைகிறான்.

ஐஸ்வரியவான் தனது செல்வத்துக்குத் தக்கபடி தனது தேயத்திலே தனது பொருளுக்குச் சிறிது லாபமும், பிறருக்கு பெரிது தேவையுமான பணமுட்டுக்குப் பணங்களைப் பலவகையான நல் வழிவகைகளில் விட்டுப் பழக்கஞ் செய்தலால் மேன்மையடைகிறான்.

விவேகி தனது சாதுரிய சாமார்த்திய விவேகத்தால் நவமாய்க் கண்டு பிடித்துச் செய்யும் தொழில் முதலியவற்றால் பிறருக் குபயோகஞ் செய்யும் தன்மையினால் பெருமை யடைகின்றான் குலமகன் தனது குலசாரத்துப் பிறழ்வின்றி நடந்து யாவராலும் மெச்சப்படுதலினால், பிறர் அவர் நல் வழியைப் பின்பற்றி நடத்தலுக் குபயோகமா யிருத்தலால் கனமடைகிறான்.

மேற் கூறிய நற்குண லட்சணமுடையவர்கள் தேயத்திலிருப்பின் ஒரு சிறு பிரயோசனமாயினு மிருத்தல் வேண்டும்.

## உண்மையே சிறந்த பூஷணம்.

உண்மை யென்பது உள்ளதைச் சொல்லுதல். இதுவே எங்கள் மார்க்க விசுவாசிகளின் முக்கிய மூலாதாரம். உண்மையைப் பேசாதவன் முஸ்லிம் அல்ல என்பது ஹதீது என்னும் திருவாக்கியம். ஒரு தப்பிதத்தைச் செய்தாலும் உண்மையைப் பேசினால் இரட்சிக்கப் படுவான். உண்மையை மறைக்கிறது கெட்ட காரியம். அது கடைசியில் வெளியாகும். பொய் சொல்லும் நாவு ஒரு க்ஷணப் பொழுதுமாத்திரம் நிலைக்கும். உத்தமமாய் நடந்து கொள்ளுகிறவர்கள் உண்மையைப்பேசுகிறவர்தான்